**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை - 2018**

---

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.1 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வுக்குட்படு உருவகம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு உருவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும். குறிப்பிட்ட அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு ஏனைய கணக்காய்வுக்குட்படு உருவகம் தொடர்பிலான வருடாந்த நிதிக்கூற்றுக்கள் விதிகளினால் வழங்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் வருடாந்த செயல்திறன் அறிக்கைகளுடன் சேர்த்து பிரதான கணக்கீட்டு அலுவலரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். குறிப்பிட்ட அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வுக்குட்படு உருவகம் தொடர்பாக வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் என்பன உரியநேரத்தில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுவதை உறுதிப்படுத்தல் வேண்டுமென்பதுடன் மேலதிகமாக பிரதான கணக்கீட்டு அலுவலர் பாராளுமன்றத்திற்கு உருவகம் பற்றிய வருடாந்த அறிக்கைகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

**1.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

---

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்தவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டம் | | | |
| (i) பிரிவு 35(ஆ) | தேசிய மருந்துகள் கொள்கையை நடைமுறைப்படுத்துவது தேசிய மதியுரை குழுவின் செயல்படாத இருந்த போதிலும், தேசிய மருந்துக் | தேசிய மருந்துக் கொள்கையை தயாரிப்பது கொள்கையொன்றை உருவாக்கும் விடயமாக இருப்பதுடன் அது தேசிய மருந்துகள் | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. | ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் வரம்பின் கீழ் வராது | |
| | (ii) பிரிவு 41(2), 66(2) மற்றும் 87(2) | மருத்துவம், வாகடகவியல், மருந்தாக்க அறிவியல் அல்லது வேறேதெனும் தொடர்புபட்ட பாடத்தில் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றை கொண்டவரான ஆட்களிலிருந்து உத்தியோகத்தர் ஒருவர் மருந்துகள் ஒழுங்குபடுத்தல் பிரிவு, மருத்துவ உபகரணங்கள் ஒழுங்குபடுத்தல் பிரிவு மற்றும் எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருட்களின் ஒழுங்குபடுத்தல் பிரிவு ஆகியவற்றின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்க வில்லை. | சம்பளங்கள் மற்றும் பதவியணிகள் ஆணைக்குழுவுடன் புதிய ஆட்சேர்ப்புக்கள் தொடர்பிலான கலந்துரையாடலின் பின்னர் வழுவை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | - மேற்படி - |
| | (iii) பிரிவு 61, 84(2), 85, 103(2), 104 | பதிவுசெய்யப்பட்ட மற்றும் நிராகரிக்கப்பட்ட மருத்துவ உபகரணங்கள் மற்றும் எல்லைக் கோட்டு உற்பத்தி பொருட்கள் தொடர்பாகவும் நிராகரிக்கப்பட்ட மருந்துகளின் பதிவு தொடர்பாகவும் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் பொதுமக்களுக்கு தெரிவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபையால் பதிவு செய்யப்பட்ட மருந்துகள் தொடர்பான ஒழுங்குபடுத்தல்கள் 2019 ஒக்தோபர் 09 ஆந் திகதியிடப்பட்ட 2144/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டன. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| | (iv) பிரிவு 123 | முறையீடுகளை கேட்கவும் தீர்மானிக்கவும் சட்டத்தின் பிரகாரம் மேன்முறையீட்டுக் குழுவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | மேன்முறையீட்டுக் குழுவொன்றை தாபிப்பதற்கு அமைச்சருக்கு வழங்கப்பட்டது. | - மேற்படி - |
| (ஆ) | 2005 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி சட்டம் (திருத்தப்பட்டது) | 2008 ஆம் ஆண்டின் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளுடன் தொடர்பான ரூபா 93,058,701 தொகையான பெறுமதிசேர் வரி உரிய திகதியில் அனுப்பப்பட்டிருக்க வில்லை. | பணியாளர் பற்றாக்குறை காரணமாக உரிய திகதியில் பெறுமதி சேர் வரியினை அனுப்ப முடிந்திருக்கவில்லை மற்றும் 2018 ஆம் | சட்டத்தின் பிரகாரம் உரிய திகதியில் பெறுமதி சேர் வரி அனுப்பப்படல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஆண்டின் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளுடன் தொடர்பான பெறுமதி சேர் வரி உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு தற்போதைக்கு அனுப்பப்பட்டிருந்தது. | வேண்டும். |
| (இ) | 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரை தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 2018 ஆம் ஆண்டின் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளுடன் தொடர்பான ரூபா 20,482,266 தொகையான முத்திரைத் தீர்வைகள் உரிய திகதியில் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | பணியாளர் பற்றாக்குறை காரணமாக உரிய திகதியில் முத்திரை தீர்வைகளினை அனுப்ப முடிந்திருக்கவில்லை. மற்றும் 2018 ஆம் ஆண்டின் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளுடன் தொடர்பான முத்திரை தீர்வைகள் உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு தற்போதைக்கு அனுப்பப்பட்டிருந்தன. | சட்டத்தின் பிரகாரம் உரிய திகதியில் முத்திரை தீர்வைகள் அனுப்பப்படல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்களின் நிதிப்பிரமாணம் 395(ஈ) | மாதத்தின் இறுதியில் கிடைக்கும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றொன்று தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2018 நவம்பர் முதல் 2019 மே வரையிலான 7 மாதங்களைக் கொண்ட காலப்பகுதியுடன் தொடர்பான வங்கிக் கணக்கிணக்கக கூற்றுக்கள் 2019 யூன் 12 ஆந் திகதி வரைக்கும் கூட தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | பணியாளர் பற்றாக்குறை காரணமாக வங்கி கணக்கிணக்க கூற்றுக்களை தயாரிக்க முடிந்திருக்கவில்லை. மற்றும் எவ்வாறாயினும், 2019 மே 21 வரைக்குமான வங்கி கணக்கு இணக்கக் கூற்றுக்கள் தற்போதைக்கு தயாரிக்கப்பட்டுள்ளன மீதமுள்ள நாட்களுக்கான வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள் உடனபடியாக தயாரிக்கப்பட்டு வருகின்றன. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2003 யூன் 02 ஆந் திகதியிடப்பட்ட பீ.ஈ.டீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | ஆண்டு தோறும் கணக்காய்வு குழு கூட்டங்கள் நடத்தப்படல் வேண்டுமென்ற போதிலும், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் 2 கணக்காய்வு குழு கூட்டங்களை மாத்திரம் நடத்தப்பட்டிருந்தன. இந்த அறிக்கையின் தேதி வரைக்கும் கூட 2019 ஆம் ஆண்டிற்கான கூட்டங்கள் எதுவும் நடத்தப்பட்டிருக்கவில்லை. | இத்தகையை குறைபாடுகள் எதிர்காலத்தில் சரி செய்யப்படும். | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | சுற்றறிக்கையினால் அறிமுகப்படுத்தப்பட்ட வடிவத்தில் கணினிகள் உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்களுக்கான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை | கணினிகள், உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்களின் கணினி மயப்படுத்தப்பட்ட நிலையான சொத்து பதிவேடொன்று பேணப்பட்டு வருகின்றது மற்றும் தொடர்புடைய வடிவத்தின் பிரகாரம் நிலையான சொத்து பதிவேடொன்றினை பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுற்றறிக்கையினால் அறிமுகப்படுத்தப் பட்ட வடிவத்தின் பிரகாரம் நிலையான சொத்து பதிவேடொன்று பேணப்படல் வேண்டும். |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், தேசிய மதியுரை குழு, மருந்துகள் மதிப்பீட்டுக் குழு, மருத்துவ உபகரண மதிப்பீட்டு குழு, எல்லைக்கோட்டு உற்பத்தி பொருட்கள் மதிப்பீட்டுக் குழு மற்றும் தேசிய மருந்துகள் தர உறுதிப்பாட்டு ஆய்வுகூடம் என்பவற்றை மேம்படுத்துவதற்கான பணிப்புரைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2019 மே 31 வரைக்கும் கூட குறிப்பிட்ட பணிப்புரைகளை சட்டபூர்வமாக்குவதற்கு அதிகாரசபை | அத்தகைய குழுக்களால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளை குறிப்பிடுவதன் மூலம் நல்ல உற்பத்தி நடைமுறைகளுக்கான வழிகாட்டல்கள் மற்றும் ஏனைய வழிகாட்டல்களை தயாரிப்பதற்காக தொடர்புடைய கடிதங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. | சட்டத்தின் பிரகாரம் பணிப்புரைகளை சட்டபூர்வ மாக்குவதற்கும் வழிகாட்டல்களை தயாரிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தவறிவிட்டது. இதன் விளைவாக அத்தகைய குழுக்களால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளை குறிப்பிட்டு நல்ல உற்பத்தி நடைமுறைகளுக்கான வழிகாட்டல்கள் மற்றும் ஏனைய வழிகாட்டல்களை தயாரிக்க முடிந்திருக்கவில்லை. | | |
| (ஆ) | 1980 இன் 27 ஆம் இலக்க ஒப்பனைச் சாதனங்கள், உபகரணங்கள் மற்றும் ஔடதங்கள் சட்டத்தினை நீக்கம் செய்து 2015 யூலை 01 முதல் அமுலாகும் வகையில் 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் அதிகாரசபை சட்டம் அதிகாரமளிக்கப்பட்டிருந்தது. சிகிச்சைக்கு அல்லாத வாசைன திரவியங்களை உற்பத்தி செய்தல் மற்றும் இறக்குமதி செய்தல் தொடர்பான நீக்கப்பட்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் புதிய சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எண்ணிக்கை மற்றும் பெறுமதியினை மதிப்பிடு செய்ய முடியாத வாசனைத் திரவிய உற்பத்திகள் 2015 யூலை 01 முதல் நாட்டிற்குள் இறக்குமதி செய்யப்பட்டிருந்த போதிலும், மேலே குறிப்பிட்ட பிரகாரம் சட்ட ஏற்பாடுகள் இன்மை காரணமாக கடந்த 4 வருட காலப்பகுதியின் போது இவ்வாறான இறக்குமதிகள் முறையாக கண்காணிக்கப் பட்டிருக்கவில்லை. தவறான மற்றும் குறைந்த தரமுள்ள வாசனைத் திரவிய உற்பத்திகளின் மூலம் ஏற்படக்கூடிய கடுமையான சுகாதார அச்சுறுத்தல்கள் தொடர்பாக முகாமையினால் முறையான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அந்த நேரத்தில் ஒப்பனைச் சாதனங்கள் ஒழுங்குபடுத்தல்கள் மீது நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் குறிப்பிட்ட குழு பொருத்தமான திருத்தங்களை அடையாளம் கண்டது. | இறக்குமதி செய்யப்பட்ட ஒப்பனை சாதனங்களை ஒழுங்குபடுத்துவதற்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தினை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பிரிவு 58 மற்றும் 82 இன் பிரகாரம், எந்தவொரு நபரும் எந்தவொரு மருந்துகளையும் அதிகாரசபையில் பதிவு செய்யாமல் மற்றும் அதிகாரசபையிடம் இருந்து உரிமத்தினை பெற்றுக் கொள்ளாமல் அத்தகைய மருந்துகளை அல்லது மருத்துவ உபகரணங்களை இறக்குமதி செய்யவோ அல்லது உற்பத்தி செய்யவோ கூடாது. குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 59 மற்றும் 83 இன் பிரகாரம் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தொடர்புடைய உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டனர். | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்காக மாத்திரம் பதிவினை விலக்களிப்பதற்கான கடிதங்கள் வழங்கப்படல் வேண்டும். |

மருந்துகளை மதிப்பீடு செய்த பின்னர் மருத்துவ உபகரணங்களின் பயனுடைமையுள்ள, காப்பான மற்றும் சிறந்த தரத்திலான மருத்துவ உபகரணம் கிடைக்கக்கூடியமையை உறுதிப்படுத்துவதற்கான தேவையை கருத்திற் கொண்ட பின்னர் உரிமமமானது வழங்கப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக, 2018 ஆம் ஆண்டின்போது பதிவினை விலக்களிப்பதற்கான 553 கடிதங்களும், 2019 சனவரி முதல் ஏப்ரல் 30 வரையிலான காலப்பகுதியின் போது 139 கடிதங்களும் அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம், மருத்துவ வழங்கல் பிரிவு மற்றும் ஏனைய தனியார் மற்றும் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாத மருந்துகள் மற்றும் மருந்துவ உபகரணங்களின் இறக்குமதியாளர்கள் சுங்கத்திலிருந்து அவர்களது இறக்குமதிகளை அப்புறப்படுத்துவதற்கு குறிப்பிட்ட பதிவினை விலக்களிப்பதற்கான கடிதங்களை பயன்படுத்தினார்கள்.

(ஈ) தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 109 இன் பிரகாரம், ஒரு உயிரைக் காத்தல், ஒரு தொற்று நோயின் அல்லது ஒரு கொள்ளை நோயின் பரவுகையை கட்டுப்படுத்துதல் அல்லது வேறு ஏதேனும் தேசிய அவசர நிலைமை போன்ற சூழ்நிலைகளில் பதிவினை விலக்களிப்பதற்கான கடிதங்கள் வழங்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், பதிவினை கடிதங்கள் வழங்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், பதிவினை விலக்களிப்பதற்கான 99 கடிதங்கள் பதிவு நீக்கப்பட்டமை, பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் கிடைக்கப்பெறாமை, குறிப்பிட்ட தேவைப்பாட்டின் கீழ் எடுத்துக் கொள்ள முடியாத விலைமனுக்களை பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் சமர்ப்பித்தமை போன்ற காரணங்களுக்காக அரச மருந்தாக்க கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. மேலும், 7 வகையான மருந்துப்

கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தொடர்புடைய உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்காக மாத்திரம் பதிவினை விலக்களிப்பதற்கான கடிதங்கள் வழங்கப்படல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | பொருட்களுக்காக அவ்வவ்போது பதிவினை விலக்களிப்பதற்கான கடிதங்களை வழங்கிய 19 சந்தர்ப்பங்கள் இருந்தன. | | |
| (உ) | பதிவினை விலக்களிப்பதற்கான கடிதங்களை வழங்கும் குழுவிற்கு 2 ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், பெரும்பாலான நேரங்களில் ஒரு ஆலோசகர் மாத்திரம் குழுவில் பங்கேற்றிருந்தார். | சுகாதார அமைச்சினால் இந்தக் குழு நியமிக்கப்பட்டது. குழுவிற்கு இரண்டு ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டதுடன் பதிவினை விலக்களிப்பதற்கான கடிதங்கள் இந்த குழுவின் அங்கீகாரத்துடன் மாத்திரம் வழங்கப்படுகின்றன. | அனைத்து உறுப்பினர்களும் பங்கேற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பிரகாரம், மருந்தின் பதிவுச் சான்றிதழ் காலாவதியாகுவதற்கு 6 மாதங்களுக்கு முன்னர் சான்றிதழை புதுப்பிக்க வேண்டுகோள் விடுக்கப்படாத சந்தர்ப்பங்களில், பதிவு தானாகவே நீக்கப்பட்டதாக கருதப்படல் வேண்டும். எவ்வாறாயினும், குறிப்பிட்ட தேவைப்பாட்டிற்கு முரணாக 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மருந்து பதிவுச் சான்றிதழ்களின் 25 கோப்புக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாதிரிச் சோதனையில் 19 நிகழ்வுகள் அவதானிக்கப்பட்டன. | மருந்து பதிவுச் சான்றிதழ் காலாவதியாகுவதற்கு 6 மாதங்களுக்கு முன்னர் சான்றிதழை புதுப்பிக்க வேண்டுகோள் விடுக்கப்படாத சந்தர்ப்பங்களில் பதிவு தானாகவே நீக்கப்படுவதை கருத்திற் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (எ) | 28 பதிவுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாதிரிச் சோதனையில், வளாகங்களினை பரிசீலனை செய்யாமல் 16 பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக மருந்து உற்பத்தி செய்முறை காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | அனைத்து பதிவுகளுக்குமான உற்பத்தி செய்முறை மீண்டும் பரிசீலனை செய்யப்படுவதுடன் 6 மாதங்களுக்குள் அனைத்து அறிக்கைகளையும் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டது. | சட்டத்தின் ஏற்பாடுகளை பின்பற்றி பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்படல் வேண்டும். |
| (ஏ) | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பிரகாரம், மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் எல்லைக்கோட்டு உற்பத்திப் பொருட்கள் என்பவற்றிற்கான பதிவுச் சான்றிதழை வழங்குவதற்கு முன்னர் | மாதிரிகளை பரிசோதனை செய்யாமல் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன ஏனென்றால் தேசிய மருந்துகள் தர உறுதிப்பாட்டு | சட்டத்தின் ஏற்பாடுகளை பின்பற்றி பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மாதிரிகளின் தரமானது தேசிய மருந்துகள் தர உறுதிப்பாட்டு ஆய்வு கூடத்தினால் சோதனை செய்யப்படல் வேண்டும். இருப்பினும், மாதிரிகளை சோதனை செய்யாமல் 82 புதிய தற்காலிக பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் 06 புதிய முழுமையான பதிவுச் சான்றிதழ்கள் 5 வருடங்களுக்காக வழங்கப்பட்டிருந்தன. மேலும், மாதிரிகளை சோதனை செய்யாமல் 84 தற்காலிக புதுப்பித்தல் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக மாதிரிகளின் சோதனை முடிவுகள் வெளியிடப்படுவதற்கு முன்னர் 07 மருந்துகளுக்கு தற்காலிக பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. மேலும், மீளாய்வாண்டின் போது மாதிரிகளை சோதனை செய்யாமல் 198 மருத்துவ உபகரணங்களுக்கும் 19 எல்லைக் கோட்டு உற்பத்தி பொருட்களுக்கும் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. | ஆய்வுகூடத்தின் திறன் போதுமானதாக இருக்கவில்லை. எவ்வாறாயினும், நியமத்தின் சான்றளிப்பு மற்றும் மருத்தின் தரத்திற்காக ஏனைய ஒழுங்குபடுத்தல் நிறவனங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் இந்த சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இவ்வாறான நிலைமைகளை தவிர்ப்பதற்காக தேசிய மருந்துகள் தர உறுதிப்பாட்டு ஆய்வு கூடத்தின் திறனை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | |

## 2.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் கீழ் செயல்படுத்தப்பட்ட தேசிய மருந்துகள் தர உறுதிப்பாட்டு ஆய்வுகூடத்திற்கு சொந்தமானதும் 2015 யூலை 01 முதல் அதிகாரசபையால் மாற்றப்பட வேண்டியதுமான சொத்துக்கள் 2019 மே 31 வரைக்கும் கூட கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், 2015 யூலை 01 இல் உள்ளவாறு காணப்பட்ட 30 பணிகள் 2019 மே 31 வரைக்கும் கூட பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகவே, குறிப்பிட்ட அனைத்து பணிகளுடன் தொடர்பான அனைத்து மாதிரிகளும் காலாவதியாகிவிட்டன. | தேசிய மருந்துகள் தர உறுதிப்பாட்டு ஆய்வுகூடத்தின் சொத்துக்களை கணக்கில் எடுத்துக் கொள்வதற்கு ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 34 மாதிரி சோதனைகளில் 03 மாதிரி சோதனைக்கான அறிக்கைகள் வழங்கப்பட்டன மற்றும் மீதிமுள்ளவை ஏற்கனவே காலாவதியாகி இருந்தன. | சொத்துக்களை மாற்றம் செய்ய மற்றும் கணக்குகளில் எடுத்து கொள்ளவும் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது தேசிய மருந்துகள் தர உறுதிப்பாட்டு ஆய்வுகூடத்திற்கு 1,767 மாதிரிகள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 58 மாதிரிகள் மாத்திரம் சோதனை | சந்தைப்படுத்தலின் பின்னரான ஆய்வுகளின் ஊடாக அரச நிறுவனங்களில் உள்ள மருந்துகளின் தரத்தை அளவிடுவதுடன் தொடர்பான | சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து மாதிரிகளையும் சோதனை செய்யக்கூடிய |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தன. மாதிரி சோதனையின் முன்னேற்றம் 03 சதவீதமாக மாத்திரம் இருந்தது. | ஏற்பாடுகளை உள்ளடக்கிய சுற்றறிக்கை அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்டதுடன் ஆய்வுகூட வசதிகளை அதிகரித்ததன் பின்னர் இலக்குப்படுத்திய திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை எடுப்பதற்கு உத்தேசிக்கப்படுகின்றது. | வகையில் ஆய்வு கூடத்தின் திறனானது அதிகரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் 792 மருந்துகளின் பதிவிற்கான விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருந்ததுடன் 07 மருந்துகளுக்கான விண்ணப்பங்கள் மீளப்பெறப்பட்டிருந்தன. அல்லது பதிவு நிராகரிக்கப்பட்டிருந்தன. மீதமுள்ள 393 மருந்துகளுக்கான பதிவு சான்றிதழ்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்காத மருந்துகளின் எண்ணிக்கை 392 ஆக இருந்தது. | மருந்திற்கான பதிவுச் சான்றிதழ்களை வழங்குவதற்காக செயற்படுத்தப்படும் செயல்முறைக்கு காலமொன்று எடுக்கும், ஏனென்றால் அது சரியாகவும் நம்பகத்தன்மையுடனும் செய்யப்படல் வேண்டும். அதற்கிணங்க சான்றிதழ்களை வழங்குவதில் காலதாதமம் ஏற்படலாம். | பதிவு செய்தலுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் பதிவுச் சான்றிதழ்களை வழங்குவதின் மீதான கோப்பொன்று முறையாகவும் துல்லியமாகவும் பேணப்பட வேண்டியதுடன் காலதாமதமின்றி பதிவுச்சான்றிதழ்கள் வழங்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் 758 மருத்துவ உபகரணங்களின் பதிவிற்கான விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருந்ததுடன் 16 மருத்துவ உபகரணங்களுக்கான விண்ணப்பங்கள் மீளப் பெறப்பட்டிருந்தன அல்லது பதிவு நிராகரிக்கப்பட்டிருந்தன. மீதமுள்ள 279 மருத்துவ உபகரணங்களுக்கான பதிவுச் சான்றிதழ்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்படாத மருத்துவ உபகரணங்களின் எண்ணிக்கை 463 ஆக இருந்தது. | மருத்துவ உபகரணங்களுக்கான பதிவுச் சான்றிதழ்களை வழங்குவதற்காக செயற்படுத்தப்படும் செயல்முறைக்கு காலமொன்று எடுக்கும், ஏனென்றால் அது சரியாகவும் நம்பகத்தன்மையுடனும் செய்யப்படல் வேண்டும். அதற்கிணங்க சான்றிதழ்களை வழங்குவதில் காலதாதமம் ஏற்படலாம். | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டின் போது மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை மீள் பதிவு செய்வதற்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களிற்கான உரிமம் வழங்குவதின் முன்னேற்றம் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | கணினிமயப்படுத்தப்பட்ட வலையமைப்பு (Network) இல்லாமை காரணமாக உரிமங்கள் வழங்குவதின் முன்னேற்றத்தை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு காலதாமதமாகியது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பதிவுச்சான்றிதழ்கள் மற்றும் உரிமங்களை வழங்குவதின் காலதாமதத்தை பின்வரும் காரணங்கள் பாதித்தன.<br><br>(i) மதிப்பீட்டிற்காக மருந்தாளர் ஒருவருக்கு விண்ணப்பத்துடன் கிடைக்கப்பெற்ற ஆவணங்களை கொண்டுள்ள கோப்பினை சமர்ப்பிப்பதில் காலதாமதமொன்று காணப்பட்டது. மேலும், மதிப்பீட்டினை தொடங்குவதற்கு நீண்ட காலமொன்று எடுக்கப்பட்டிருந்தது. 08 மாதிரிக் கோப்புக்களில் 05 கோப்புக்களின் மதிப்பீட்டினை தொடங்குவதற்கு 09 மாதங்கள் முதல் 16 மாதங்கள் வரையிலான காலப்பகுதியொன்று எடுக்கப்பட்டிருந்தது.<br><br>(ii) மதிப்பீடுகள் பூர்த்தி செய்யப்பட்டு பதிவுக்கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்த போதிலும், சான்றிதழை வழங்குவதற்கு 2 மாதங்களுக்கு மேலான காலமொன்று எடுக்கப்பட்டிருந்தது.<br><br>(iii) மருந்தாளர்களின் 17 பதவிகள், ஔடத பரிசோதகர்களின் 17 பதவிகள், ஔடத பகுப்பாய்வாளர்களின் 07 பதவிகள் மற்றும் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களின் 06 பதவிகள் என்பன வெற்றிடங்களாக இருந்தன.<br><br>(iv) போதுமான ஆய்வுகூட வசதிகள் கிடைக்கப் பெறவில்லை. | பதிவுச்சான்றிதழ்களை வழங்குவதற்காக செயல்படுத்தப்படும் செயல்முறைக்கு காலமொன்று எடுக்கும் ஏனென்றால் அது சரியாகவும், நம்பகத்தன்மையுடனும் செய்யப்படல் வேண்டும். அதற்கிண்க சான்றிதழ்களை வழங்குவதில் காலதாமதம் ஏற்படலாம். | விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட திகதியில் இருந்து சான்றிதழ்கள் மற்றும் உரிமங்களை வழங்குவதற்கான நியமமான (standard) காலமொன்று அடையாளம் காணப்படல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட திட்டமொன்றின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டியதுடன் பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் உரிமங்களினை வழங்குவதில் ஏற்படும் காலதாமதங்கள் குறைக்கப்படல் வேண்டும். |
| (எ) | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பிரிவு 119(4) இன் பிரகாரம், மருந்தகங்களை பதிவு செய்வதற்காகவும், உரிமங்களை | பணியாளர் பற்றாக்குறை மற்றும் 3 ஆண்டுகளினுள் 3 இடங்களுக்கு உரிமம் வழங்கும் பிரிவு நிறுவப்பட்டதால் | விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட திகதியில் இருந்து சான்றிதழ்கள் மற்றும் உரிமங்களை |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குவதற்காகவும் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியொன்று தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டின் போது 10 மருந்தகங்களுக்கான உரிமங்களை வழங்குவதற்காக பதிவு செய்வதற்கான கட்டணம் செலுத்தப்பட்ட திகதியிலிருந்து 03 மாதங்கள் முதல் 07 மாதங்கள் வரையிலான பல்வேறு காலப்பகுதிகள் எடுக்கப்பட்டிருந்தன. மேலும், மருந்தகங்களுக்கான உரிமங்களை வழங்குவதற்கான செயல்முறைகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்க கூடியதான முறையான தரவுக் கோப்பொன்று அதிகாரசபையால் பேணப்பட்டிருக்கவில்லை. | காலதாமதங்கள் ஏற்பட்டன. 2019 செப்தம்பர் 01 முதல் வலையமைப்பு முறைமையின் பிரகாரம் உரிமம் வழங்குதல் தொடங்கப்படுகின்றமை காரணமாக எதிர்காலத்தில் இந்த பிரச்சினை எழாது. | வழங்குவதற்கான நியமமான (standard) காலமொன்று அடையாளம் காணப்படல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட திட்டமொன்றின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டியதுடன் பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் உரிமங்களினை வழங்குவதில் ஏற்படும் காலதாமதங்கள் குறைக்கப்படல் வேண்டும். மேலும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல் என்பவற்றுடன் தொடர்பான தகவல்களை உள்ளடக்குகின்ற கோப்பொன்று முறையாக பேணப்படல் வேண்டும். |
| (ஏ) | கொழும்பு, கொஹுவளை, களுபோவில மற்றும் தெஹிவளை ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள 20 மருந்தகங்களில் ஔடத பரிசோதகருடன் கணக்காய்வு உத்தியோகத்தர்களால் 2019 யூன் 04 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| | (i) 1985 திசெம்பர் 02 ஆந் திகதியிடப்பட்ட 378/3 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் பிரிவு 49 மற்றும் 63 இன் பிரகாரம், உரிமம் பெற்ற ஒவ்வொரு மொத்த வியாபாரி அல்லது சில்லறை வியாபாரி அவருக்கு வழங்கப்பட்ட | பணியாளர் பற்றாக்குறை மற்றும் 3 ஆண்டுகளினுள் 3 இடங்களுக்கு உரிமம் வழங்கும் பிரிவு நிறுவப்பட்டதால் காலதாமதங்கள் ஏற்பட்டன. | உரிமங்கள் வினைத்திறனாகவும் முறையாகவும் வழங்கப்படல் வேண்டும். மருந்தங்களை கண்காணிப்பு செய்வது சீராக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உரிமத்தினை அவர் மருந்து விற்பனை செய்யும் வளாகத்தில் எளிதில் பார்க்கக்கூடிய இடத்தில் பதிவுச் சான்றிதழின் அசலுடன் சேர்த்து காட்சிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், 09 மருந்தகங்களில் மருந்தக உரிமம் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 1992 யூலை 06 ஆந் திகதியிடப்பட்ட 722/2 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் பிரிவு 43(1)(ஆ) இன் 15 ஆம் திருத்தத்தின் பிரகாரம், மருந்து விற்பனைக்காக தயார் செய்யப்பட்ட இடமானது உரிமம் பெற்ற மருந்தின் தரத்தை பாதுகாப்பதற்கான வசதிகளை வழங்க முடியுமான போதுமான இடமாக இருத்தல் வேண்டும். மேலும், குறிப்பிடப்பட்ட இடம் பதிவு செய்யப்பட்ட மருந்தாளரின் நிருவாகத்தின் கீழ் இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய தேவைப்பாடுகளை கொண்டிருந்த மருந்தகங்கள் காணப்பட்டன. மேலும், பதிவு செய்யப்பட்ட மருந்தாளர்கள் இல்லாத 13 மருந்தகங்கள் காணப்பட்டன. | கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பிரச்சினைகள் சரியாக அடையாளம் காணப்பட்டு நிலைமையை சரிசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | மருந்தகங்கள் முறையாக கண்காணிக்கப்படல் வேண்டும். |
| (iii) | 1985 திசெம்பர் 02 ஆந் திகதியிடப்பட்ட 378/3 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் பிரிவு 41 மற்றும் 55 மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் பிரிவு 119(1) இன் பிரகாரம், அதிகாரசபையிடம் இருந்து உரிமத்தினை பெற்றுக் கொள்ளாமல் எந்தவொரு நபரும் மருந்தகத்தை தொடர்ந்து நடத்தகூடாது. இருந்தபோதிலும், தொடர்புடைய காலப்பகுதிக்கான | சில மருந்தகங்கள் உரிமத்திற்காக விண்ணப்பத்திருந்த போதிலும், பணியாளர்களின் பற்றாக்குறை காரணமாக அது வழங்கப்பட்டிருக்கவில்லை. மற்றும் ஏனைய மருந்தகங்கள் தொடர்பில் சட்டநடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மருந்தகங்கள் முறையாக கண்காணிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உரிமத்தினை பெற்றுக் கொண்டிருக்காத 15 மருந்தகங்கள் காணப்பட்டன. | | |
| (iv) | கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும், உரிமம் வழங்குவதில் காலதாமதம் மற்றும் உரிமத்தினை பெற்றுக் கொள்ளாமல் அல்லது உரிமத்தினை புதுப்பிக்காமல் வணிகத்தை நடத்துதல் என்பவற்றை தவர்ப்பதற்கு முறையான முறைமையொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. நாடு முழுவதும் நடாத்தப்படும் மருந்தகங்களின் மீதான மேற்பார்வை போதுமானதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த நிலைமைக்கு பணியாளர்களின் பற்றாக்குறை தாக்கம் செலுத்தியதுடன் கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டவைகள் வலையமைப்பு முறைமையில் தீர்க்கப்பட்டன. | மருந்தகங்கள் முறையாக கண்காணிக்கப்படல் வேண்டும். |

**2.3 பெறுகை முகாமைத்துவம்**
**------------------------------------**

| **கணக்காய்வு பிரச்சனை** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ---------------------------------------- | --------------------- | ------------------- |
| அதிகாரசபையானது ரூபா 6,300,223 தொகையினை செலவு செய்வதன் மூலம் பொருட்கள் வாங்குதல் (shopping) முறையை பின்பற்றி 16 மேசைக் கணினிகள், மைக்ரோ சொ.ஃப்ட் ஆபிஸ் ஹோம் அன்ட் பிஸ்னஸ் (MS Office Home and Office) 2016 ஆம் ஆண்டுக்கான பதிப்பினை கொண்டுள்ள 07 மடிக்கணினிகள், 30 UPS, 19 லேசர் அச்சு இயந்திரங்கள், 15 புள்ளி அச்சு இயந்திரங்கள் மற்றும் 07 பல்திறன் கொண்ட பிரதி செய்யும் இயந்திரங்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டன. அரச பெறுகை வழிகாட்டியின் பிரகாரம், பெறுகை நேர அட்டவணை தயாரிக்கப்படவில்லை. நியம விலைமனுக் கோரலுக்கான பத்திரங்கள் அல்லது அதனனுடன் இணங்கும் வேறு எந்த ஆவணமும் பயன்படுத்தப்படவில்லை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. விலைமனுவானது பதிவு செய்யப்பட்ட 22 வழங்குனர்களுக்கிடையே 10 வழங்குனர்களிடம் இருந்து அழைக்கப்பட்டிருந்தது என்று குறிப்பிடப்பட்டிருந்தபோதிலும், குறிப்பிட்ட 10 வழங்குனர்களின் தெரிவு | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் ஏற்றுக் கொ்ளப்படுகின்றன. அரச பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கைகளை எடுப்பதற்கு தொடர்புடைய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய உரிமங்களை வழங்குவதற்கு கணினி மற்றும் உதிரிப்பாகங்களை பயன்படுத்துவது அவசியமானதாக இருக்கிறது. அதிக குறைபாடுகள் காணப்பட்டன ஏனென்றால் செயல்முறை பயிற்சிக்காக ஆட்சேர்ப்புச் | அரச பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அவர்களுடைய பெயர்கள் மற்றும் விலைமனுக்கள் கோரப்பட்ட முறை போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்கு எழுத்து மூலமான சான்றுகள் மேற்கொள்ளப்படவில்லை என்று அவதானிக்கப்பட்டது. விலைமனுக்கள் கோரலின் முடிவுத் திகதி 2017 நவம்பர் 20 என்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், விலைமனுக்கள் கோரப்பட்ட திகதி உறுதிப்படுத்தப்படவில்லை.<br>மேற்கொள்கள் கோரப்பட்டிருந்த திகதியை தொடர்ந்து வரும் நாளான 2017 நவம்பர் 21 அன்று முடிவுத்திகதியானது 2017 நவம்பர் 23 வரை நீடிக்கப்பட்டிருந்தது.<br>07 விலைமனுதாரர்கள் மாத்திரம் மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கின்றனர்.<br>தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் விவரக்குறிப்புக்கள் அங்கீகரிக்கப்படவில்லை. விலைமனு செல்லுபடியாகும் காலப்பகுதி குறிப்பிடப்படவில்லை. கேள்வி மனு திறத்தல் குழு நியமிக்கப்படவில்லை. கேள்விமனுக்கள் திறத்தல் தொடர்பான தகவல்கள் உரிய வடிவத்தில் அறிக்கைப்படுத்தப்படவில்லை. ஏற்றுக் கொள்ளும் கடிதம் விலைமனுதாரருக்கு வழங்கப்படவில்லை. செயலாற்றுகை பிணைமுறி மற்றும் உத்தரவாத சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்படவில்லை. மேலும், வழங்கல் செய்யப்பட்ட கணினி மற்றும் உதிரிப்பாகங்களுக்கான பொருள் பெறுகை குறிப்புக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. இது நிலையான சொத்து பதிவேடுகளில் மற்றும் முறையான இருப்பிலும் கூட பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கு பதிலாக பொதுப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது. கணினி மற்றும் உதிரிப்பாகங்களில் 04 கணினிகள் பௌதீக மெய்மையாய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செய்யப்பட்டிருந்த திறமை சாராத ஊழியர்கள் மற்றும் குறைந்தபட்ச அதிகாரிகளின் சேவையுடன் நிறுவனத்தின் அன்றாட வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போதைக்கு குறிப்பிட்ட அளவில் பணியாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | |

## 2.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 08 மேல் நிலை நிருவாக பதவிகளில் 23 வெற்றிடங்கள், 06 மேல் நிலை நிருவாகமற்ற | தற்போதைக்கு சம்பளம் மற்றும் பதவியணிகள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடல்கள், | அதிகாரசபையின் செயற்பாடுகளை இடையூறு இன்றி மேற்கொள்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | பதவிகளில் 65 வெற்றிடங்கள், 04 சிறு பதவிகளில் 16 வெற்றிடங்கள் உள்ளடங்கலாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபைக்கு அங்கீகரிக்கப்பட்ட பதியணிகளில் 104 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதிகாரசபையை ஸ்தாபித்து 4 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், அவ்வாறான வெற்றிடங்களில் 86 வெற்றிடங்களை நிரந்தரமாக நிரப்புவதற்கு அதிகாரசபை தவறிவிட்டது. கவர்ச்சியான சம்பளம் மற்றும் ஏனைய நன்மைகளுடன் ஆட்சேர்ப்புத் திட்டம் சரியான நேரத்தில் திருத்தப்படாமல் இருந்தமை இந்த நிலைமையை பாதித்திருந்தது. மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், எல்லைக்கோட்டு உற்பத்திகள், ஆய்வு கூட சோதனைகள் மற்றம் மருந்தகங்களை கண்காணித்தல் போன்ற தொழில்நுட்ப நடவடிக்கைகளை நிறைவேற்றுவதினை பணியாளர்களின் பற்றாக்குறை பாதித்திருந்தது. | நடைபெற்று வருகின்றன. மற்றும் ஆட்சேர்ப்பு திட்டத்தை தளாரித்ததன் பின்னர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அவசியமான வெற்றிடங்களை அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளினுள் நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பணிப்பாளர் / பிரதி பணிப்பாளர், மருத்துவ உத்தியோகத்தர், உள்ளக கணக்காய்வாளர், ஔடத பகுப்பாய்வாளர், கிரயவியல் உத்தியோகத்தர், ஔடத பரிசோதகர் மற்றும் மருந்தாளர் போன்ற பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதைக்கு சம்பளம் மற்றும் பதவியணிகள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடல்கள், நடைபெற்று வருகின்றன மற்றும் ஆட்சேர்ப்பு திட்டத்தை தளாரித்ததன் பின்னர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஆட்சேர்ப்புத் திட்டங்கள் தயாரிக்கப்படுவதுடன் அதற்கான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 6.5.1 இன் ஏற்பாடுகள் மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதியிடப்பட்ட 01/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நியதிச்சட்ட சபையானது நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், இந்த அறிக்கையின் திகதி வரைக்கும் கூட 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது துரிதப்படுத்தப்படுவதுடன் எதிர்காலத்தில் உரிய திகதியல் நிதிக்கூற்றுக்களை சமரப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சுற்றறிக்கை பிரகாரம் உரிய திகதியில் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 3.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2018 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 14 நடவடிக்கைகள் நிறைவேற்றுவதற்கு அதிகாரசபை தவறிவிட்டது. | எதிர்கால செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிப்பதற்கும் பின் தொடர்தல்களுக்கும் அதிக கவனம் செலுத்தப்பட்டது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப செயல் நடவடிக்கைத் திட்டம் திருத்தப்படல் வேண்டும். ஒவ்வொரு நடவடிக்கையையும் பூர்த்தி செய்வதற்கு தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு பொறுப்பு ஒதுக்கப்படல் வேண்டியதுடன் இந்த விடயம் தொடர்பாக முறையான மேற்பார்வையொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நடவடிக்கைகளின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செயல்திறன் குறிகாட்டிகள் குறிப்பானதாக, போதுமானதாக மற்றும் அளவிடக்கூடியதான விதத்தில் காட்டப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க, 2018 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 27 நடவடிக்கைகளை நிறைவேற்றுவதின் முன்னேற்றத்தை குறிப்பாக மதிப்பீடு செய்ய முடியவில்லை. | எதிர்கால செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிப்பதற்கும் பின் தொடர்தல்களுக்கும் அதிக கவனம் செலுத்தப்பட்டது. | செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாகவும், முறையாகவும் தயாரிக்கப்படல் வேண்டும். செயல்திறன் குறிகாட்டிகள் குறிப்பிட்ட, போதுமான மற்றும் அளவிடக்கூடிய விதத்தில் காட்டப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றத்தை 100 சதவீதத்தில் நிறைவேற்றுவதை இலக்காக கொண்ட அதிகாரசபைக்கான கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கான காணியினை உடைமையாக்குவதற்கான நடவடிக்கைகளின் ஆரம்ப கட்ட படிமுறை கூட தொடங்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது தொடர்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. | மீளாய்வாண்டின் போது நிறைவேற்ற முடியுமான நடவடிக்கைகளை அல்லது அதன் பகுதிகளை உள்ளடக்கும் வகையில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மருந்து, மருத்துவ உபகரணங்கள், எல்லைக்கோட்டு உற்பத்தி மீதான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பதிவு செய்யப்பட்டதும் உரிமம் பெற்றதுமான மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், எல்லைக்கோட்டு உற்பத்தி அல்லது மருத்துவ உற்பத்தியின் பகுப்பாய்வு போன்வற்றின் தரம் மற்றும் பாதுகாப்பு மீதான சந்தைப்படுத்தலின் பின்னரான ஆய்வுகளின் மீதான | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களில் கவனம் செலுத்தி செயல் நடவடிக்கை திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு இயலுமான வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான இலக்குப்படுத்திய நடவடிக்கைகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரல் மற்றும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் என்பி/எஸ்பி/எஸ்டீஜீ/17 இன் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ள நிறைவேற்ற வேண்டிய குறிக்கோள்கள், அத்தகைய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு கிடைக்கக்கூடிய இடைவெளிகள் மற்றும் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான முறையான குறிகாட்டிகள் என்பன அடையாளம் காணப்படல் வேண்டுமென்றபோதிலும், அவ்வாறான குறிகாட்டிகள் அதிகார சபையால் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை மற்றும் அடைவுகள், விலகல்கள் மற்றும் விஷேட கவனம் செலுத்தப்படவேண்டிய மாறுபடும் பகுதிகளும் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளாக உள்நாட்டு மருந்து உற்பத்தியை மேம்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளுக்கு அதிகார சபையால் முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டிருந்தது. இந்த விடயம் தொடர்பில் பகுப்பாய்வு ரீதியாக மேலதிக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |